இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 33 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 27 – வெள்ளிக்கிழமை 12 செப்டம்பர் 2025 – திருச்சி ★★ 12 பக்கங்கள்

Established : 10.8.1942 - Volume : 84 - Issue 33 : Thiruvalluvar Year - 2056 - Aavani 27 - Friday 12 September 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00


## 49,353 நபர்களுக்கு வேலைவாய்ப்பு! 24,307 கோடி ரூபாய் முதலீட்டில் 92 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

# ஓசூரில் முதலீட்டாளர்கள் மாநாடு! முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றார்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (10.9.2025) சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற “காவலர் நாள் விழா – 2025” இல், காவலர் நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில், காவல் துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) க. வெங்கடராமன், சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ. அருண் உள்ளிட்ட காவல்துறை உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## ‘அசென்ட் சர்க்யூட்ஸ்’ நிறுவனம் சார்பில்

## 1200 பேருக்கு வேலைவாய்ப்பு – 2 திட்டங்களுக்கு அடிக்கல்!

**ஓசூர், செப். 12 -**

**கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் நேற்று நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காகநேற்று (11.09.2025-வியாழக்கிழமை) கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தந்தார்.

காலை 11 மணி அளவில் சென்னையில் இருந்து விமானம் மூலம் ஓசூர் பேளகொண்டப்பள்ளியில் உள்ள தனேஜா விமான ஓடு தளத்தை வந்தடைந்தார். அங்கு அவருக்கு கழக நிர்வாகிகளும், முன்னணியினரும், தொண்டர்களும், அரசு அதிகாரிகளும் சிறப்புமிகு வரவேற்பு அளித்தார்கள்.

தொடர்ந்து ஓசூரில் தளி சாலையில் உள்ள ஆனந்த் கிராண்ட் பேலஸ் சென்றடைந்தார். அங்கு 11.30 மணிக்கு நடைபெற்ற தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்துகொண்டார்.

### 92 முதலீட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின!

தமிழ்நாடு அரசு ஏற்கனவே தூத்துக்குடி மாவட்டத்தை மையமாகக் கொண்டு ஒரு முதலீட்டாளர் மாநாட்டை நடத்தியது. இதன் அடுத்த கட்டமாக ஓசூரை மையமாகக் கொண்டு நேற்றையதினம் முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது. இந்த முதலீட்டாளர்கள் மாநாட்டில் 92 முதலீட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

பின்னர் அங்கிருந்து 12.50 மணிக்கு எல்காட் தொழில்நுட்பப் பூங்காவிற்குச் சென்றார். அங்கு அமைய உள்ள நிறுவனத்திற்கு அடிக்கல் நாட்டினார். மாலையில் குருபரப்பள்ளி டெல்டா நிறுவனத்திற்கு வருகை தந்தார். அங்கு புதிய தொழிற்சாலை தொடங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

---

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# “காவலர் நாள் விழா - 2025” உறுதிமொழி ஏற்பு!

## சென்னை, ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்றது!

**சென்னை, செப். 11 -**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் “காவலர் நாள் விழா - 2025” உறுதி மொழி ஏற்கப்பட்டது.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (10.9.2025) சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற “காவலர் நாள் விழா 2025”ல், காவலர் நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்கள் 29.4.2025 அன்று நடைபெற்ற 2025-2026 பட்ஜெட் கூட்டத் தொடரில், “முதன் முதலாக 1859ஆம் ஆண்டில் மெட்ராஸ் மாவட்ட காவல் சட்டத்தை நிறைவேற்றி, நவீன மற்றும் அமைப்புரீதியான காவல்துறை தோற்றுவிக்கப்பட்ட செப்டம்பர் 6ஆம் நாள் இனி ஆண்டுதோறும் காவலர் நாளாகக் கொண்டாடப்படும்” என்று அறிவித்தார்.

அதன்படி, முதல் காவலர் நாள் கொண்டாட்டங்களைக் குறிக்கும் வகையில், அனைத்து காவல் நிலையங்களிலும் உறுதிமொழி ஏற்பு, இன்னுயிர் நீத்த காவல்துறையினருக்கு அஞ்சலி செலுத்துதல், காவல்துறையின் செயல்பாடுகளை பொதுமக்களிடம் கொண்டு செல்வது, காவல் குடும்பங்கள் மற்றும் சமூகத்தை உள்ளடக்கிய கலாச்சார நிகழ்வுகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் மாவட்டங்கள் மற்றும் நகரங்களில் நடைபெற்றன.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற “காவலர் நாள் விழா 2025”ல், காவலர் நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

**காவலர் நாள் உறுதிமொழி**

**“இந்திய அரசியலமைப்பின் பாலும், தமிழ்நாடு காவல் துறையின், உயரிய நோக்கங்களின் பாலும், நான் உண்மையான ஈடுபாடும், உளமார்ந்த பற்றும் கொண்டிருப்பேன் என்று, மனமார உறுதி கூறுகிறேன்.**

**எந்தவித அச்சமோ, விருப்பு வெறுப்போ இன்றி, அனைத்துத் தரப்பு மக்களுக்கும், நியாய உணர்வுடன் என் கடமைகளை நிறைவேற்றுவேன் என்றும் உறுதியளிக்கிறேன்.”**

மேலும், காவலர் நாள் விழாவை முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற காவலர் குடும்பங்களைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு முதல்வர் அவர்கள் பரிசுகளை வழங்கி, சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில், காவல்துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) க. வெங்கடராமன், சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ.அருண், உள்ளிட்ட காவல்துறை உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வரின் மருமகன் சபரீசனின் தந்தையார்

# எஸ்.வேதமூர்த்தி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, செப்.12-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சம்பந்தியும், மருமகன் சபரீசன் அவர்களின் தந்தையாருமான எஸ். வேதமூர்த்தி அவர்கள் நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

**அன்னாரின் மறைவுக்கு தமது இரங்கலைத் தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “வேதமூர்த்தி அவர்களின் மறைவு, ஒட்டுமொத்தக் குடும்பத்திற்குமே ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

வேதமூர்த்தி அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

எனது மருமகன் சபரீசன் அவர்களின் தந்தையார் வேதமூர்த்தி அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

வேதமூர்த்தி அவர்களின் மறைவு ஒட்டுமொத்தக் குடும்பத்திற்குமே ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

தந்தையை இழந்து வாடும் சபரீசன் அவர்களுக்கும், குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மறைந்த வேதமூர்த்தி அவர்களின் உடல், கொட்டிவாக்கம் கிழக்கு, ஏஜிஎஸ் காலனி, இரண்டாவது குறுக்கு தெரு, பிளாட் எண். சி 15 என்ற முகவரியில் உள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அன்னாருக்கு இன்று (12.9.2025) மாலை 3.00 மணியளவில் சென்னை, பெசன்ட் நகர் மின்மயானத்தில் இறுதி அஞ்சலி செலுத்தப்படும்.

---

## கொலோன் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையால் வழங்கப்பட்ட

# பழங்கால ஓலைச்சுவடிகள் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் பாதுகாக்கப்படும்!

## அறங்காவலர் – இயக்குநர்களிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, செப். 12 -**

**கொலோன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையால் வழங்கப்பட்ட பழங்கால ஓலைச்சுவடிகளை, பாதுகாத்திட ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் அறங்காவலர் மற்றும் இயக்குநர்களிடம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.9.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்டபோது, ஜெர்மனி நாட்டின், கொலோன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையால் வழங்கப்பட்ட பழங்கால ஓலைச்சுவடிகளை, பாதுகாத்திட ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளையின் அறங்காவலர் ஆர்.பாலகிருஷ்ணன், (ஓய்வு), இயக்குநர்கள் பிரகாஷ் மற்றும் சுந்தர் ஆகியோரிடம் வழங்கினார்.

பழந்தமிழ் இலக்கியச் சுவடிகள், பல முதற்பதிப்புகள் என 40 ஆயிரத்திற்கும் அரிய தமிழ் நூல்களைக் கொண்ட கொலோன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை நூலகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1.9.2025 அன்று நேரில் சென்று பார்வையிட்டார்.

ஐரோப்பாவில் தமிழியல் ஆய்வுகளுக்கான முக்கிய மையமான ஜெர்மனி நாட்டிலுள்ள கொலோன் பல்கலைக்கழக தமிழ்த்துறை தொடர்ந்து, தொய்வின்றி, இயங்கிட தமிழ்நாடு அரசின் சார்பில் 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் உடனடியாக கொலோன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்கு வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 7.7.2021 அன்று உத்தரவிடப்பட்டு, வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

## மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க, கால நிர்ணயம் செய்த விவகாரம்:

# குடியரசுத் தலைவரின் கேள்விகளை நிராகரிக்க வேண்டும்!

## உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வலியுறுத்தல்!



*புதுடெல்லி, செப். 12-*

*மசோதாக்களுக்கு கால நிர்ணயம் செய்த தீர்ப்புக்கு எதிராக குடியரசு தலைவர் மூலம் ஒன்றிய அரசு கேள்வி எழுப்பிய வழக்கு உச்சநீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. இதில் தமிழ்நாடு அரசு தரப்பில் மூத்த வழக்கறிஞர் வில்சன் ஆஜராகி வாதிட்டார். ஆளுநர் வழக்கில் உச்சநீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பை தமிழ்நாடு மட்டுமல்ல; பல மாநிலங்கள் கொண்டாடுகின்றன என்றும் அதற்கு பாதிப்பு ஏற்படக்கூடாது என்றும் தெரிவித்தார்.*

*மேலும், ஆளுநர், மாநில அமைச்சரவை பரிந்துரைப்படிதான் செயல்படமுடியும் என்றும், இதனை அரசியல் சாசன பிரிவு 200, 201 தெளிவாக வரையறுத்துள்ளதாகவும் வில்சன் குறிப்பிட்டார்.*

*ஆளுநர் மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்குவதில் கால நிர்ணயம் செய்வது அவசியமானது என்றும், தமிழ்நாடு வழக்கை பொறுத்தவரையில் 2023ம் ஆண்டு மனுதாக்கல் செய்யப்பட்டு 2025ம் ஆண்டுதான் தீர்ப்பு கிடைத்ததாகவும், 2 ஆண்டுகள் நீதிமன்றத்துக்கு அலைந்து கொண்டிருந்ததாகவும் வில்சன் தெரிவித்தார்.*

*குடியரசுத்தலைவர் எழுப்பிய கேள்விகளுக்கு ஆளுநர் வழக்கு தீர்ப்பிலேயே பதில்கள் உள்ளதாகவும், எனவே குடியரசுத் தலைவர் கேள்விகளை நிராகரிக்க வேண்டும் என்றும் வில்சன் வாதிட்டார்.*

*இதனைத் தொடர்ந்து, குடியரசுத்தலைவர் கேள்விகளுக்கு 109 பக்கங்கள் அடங்கிய தமிழ்நாடு அரசின் விரிவான எழுத்து மூலமான வாதங்களையும் வழக்கறிஞர் வில்சன் தாக்கல் செய்தார். தொடர்ந்து வாதிட்ட மற்ற மாநில வழக்கறிஞர்கள், கால நிர்ணயம் இல்லாத பல பிரச்சினைகளில் உச்சநீதிமன்றம் கால நிர்ணயம் செய்துள்ளதாகவும், சபாநாயகர் முடிவு எடுப்பது குறித்தும், தேர்தல் ஆணையர் நியமனம் தொடர்பாகவும் கால நிர்ணயம் செய்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.*